மேலும், எனது தொகுதியில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமச் சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவற்றைச் சரிசெய்ய, நடவடிக்கை எடுக்குமாறு இந்த அரசைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–55

ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதிகள் சுற்றுச்சூழல் மாசுபட்டு மிகவும் மோசமான நிலையில் உள்ளன. மேலும், சாக்கடை வசதிகளும், கழிப்பிட வசதிகளும் இல்லாமலும், பராமரிப்பின்றியும் அந்தப் பகுதிகள் காணப்படுகின்றன. எனவே இந்தப் பகுதி மக்களுக்கு நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. 5,000 பழங்குடியின மக்கள் மேட்டூர் பாலமலையில் வசிக்கின்றனர். அங்கு ரோடு இல்லை, மின்சாரம் இல்லை, பள்ளிக்கூடம் இல்லை, ரேஷன் கடை இல்லை. அப்பகுதி கடல்மட்டத்திலிருந்து 4,500 அடி உயரத்தில் இருக்கிறது. அங்கு பழங்குடியின மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த அரசு நன்கு பரிசீலனை செய்து, அந்தப் பழங்குடியின மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இயற்கையான சுற்றுச்சூழலையும், சுகாதார, அடிப்படை வசதிகளையும் அவர்களுக்குச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு கேப்டன் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நாளை, (6–9–2011) செவ்வாய்க்கிழமை பதிலுரை வழங்குவார்கள்.

7. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை, (6–9–2011) செவ்வாய்க்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 6–9–2011, செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, (6–9–2011) செவ்வாய்க்கிழமை வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, (6–9–2011) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–57 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

37. (i) *யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மத்திய காவல் படை கேண்டீன் மையங்களுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, விற்பனை செய்யும் யாதொரு பொருட்களின் (பெட்ரோல், டீசல், சிமெண்ட், மது, ஆல்கஹால் கலந்த பானங்கள் ஆகியவை நீங்கலாக) மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்;* (ii) *அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மத்திய காவல் படை கேண்டீன் மையங்களுக்குச் செலுத்தத்தக்க வரியிலிருந்து*